உ

கடவுள் துணை

309
2-55

ஔவையார் அருளிய

# ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1955
MADRAS

தமிழ்ப்பண்டிதர்
T. C. பார்த்தசாரதி அய்யங்கார்
எழுதியது.



அமரம்பேடு. இரங்கசாமி முதலியார் குமாரர்
அ. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாசம் பிரஸ்
சிஜி 1955 [இதன் விலை அணா 2
பிள்ளை வீதி, சென்னை-1.

O-,YAAV,A:g
N55
120249
16101

120249

O:1 44V, A:8
N55

உ

### ஔவையார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

## மூலமும்—உரையும்.

### கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

**(பதவுரை)** ஆத்தி-ஆத்திப்பூ மாலையை, சூடி-தரித்தவராகிய சிவபெருமான், அமர்ந்த-விரும்பிய, தேவனை-பிள்ளையாகிய விநாயகக்கடவுளை, ஏத்தி ஏத்தி-துதித்துத் துதித்து, தொழுவோம்-வணங்குவோம், யாம்-நாங்கள் என்றவாறு.

**(கருத்துரை)** சிவபிரான் அன்பிற்கு உகந்த பிள்ளையாகிய யானைமுககடவுளை நாம் தினம் பலதரம் துதித்து நமஸ்காரஞ் செய்வோமாக என்பதாம்.

### நூல்

17 APR 1955

#### 1 அறஞ்செய விரும்பு

(ப-ரை) அறம்-தருமத்தை, செய-செய்வதற்கு, விரும்பு-நீ ஆசைகொள்.

(க-ரை) தருமகாரியத்தைச் செய்ய நீ ஆசைகொள்ளுவாய் என்பதாம்.

#### 2 ஆறுவது சினம்

(ப-ரை) ஆறுவது-உனக்குள்ளே தணிய வேண்டுவது, சினம்-கோபமே ஆம்.

(க-ரை) கோபம் வரவொட்டாமல் தணித்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதாம்

#### 3 இயல்வது கரவேல்

(ப-ரை) இயல்வது-இரப்போருக்கு உன்னால் தரக்கூடிய பொருளை, கரவேல்-நீ ஒளிக்காதே.

(க-ரை) உன்னிடம் வந்து இரக்கும் ஏழைகளுக்கு உன்கையில் உள்ளதை ஒளிக்காமல் கொடுத்துவிடு என்பதாம்.

## 4 ஈவது விலக்கேல்

(ப-ரை) ஈவது - தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர் கொடுப்பதை, விலக்கேல்-நீ தடுக்காதே.

(க-ரை) தருமஞ் செய்யும் ஒருவரை, நீ நடுவில் நின்று வேண்டாமென்று தடுக்காதே என்பதாம்.

## 5 உடையது விளம்பேல்

(ப-ரை) உடையது - உனக்கு உள்ள பொருளை, விளம்பேல்-நீ பிறர் அறியும்படி சொல்லாதே.

(க-ரை) உனக்கு எவ்வளவு பொருள் இருந்தாலும், அதனை நீயே எடுத்துப் புகழாகப் பேசாதே என்பதாம்.

## 6 ஊக்கமது கைவிடேல்

(ப-ரை) ஊக்கமது - செய்தொழிலில் மனஞ் சோராமையை, கைவிடேல்-நீ கைவிடாதே.

(க-ரை) நீ எப்பொழுதும் சுருசுருப்புடையவனாகவே இருக்க வேண்டும் என்பதாம்.

## 7 எண்ணெழுத் திகழேல்

(ப-ரை) எண்-கணித நூலையும், எழுத்து-இலக்கண நூலையும், இகழேல்-நீ இகழ்ந்து தள்ளாதே.

(க-ரை) இலக்கணத்தையுங் கணக்கையும் செவ்வையாகக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதாம்.

## 8 ஏற்ப திகழ்ச்சி

(ப-ரை) ஏற்பது - ஒருவரிடத்தில்போய் இரப்பது, இகழ்ச்சி-பழிப்பாகும்.

(க-ரை) எப்படிப்பட்ட பொருளையும் ஒருவரிடம் யாசிப்பது பழிப்பாகும் என்பதாம்.

## 9 ஐய மிட்டுண்

(ப-ரை) ஐயம் - பிச்சையை, இட்டு - இரப்பவர்களுக்குக் கொடுத்து, உண்-நீ சாப்பிடு.

(க-ரை) நீ மாத்திரம் தனியாகச் சாப்பிடாதே, யாசிப்பவர்களுக்குக் கொடுத்துச் சாப்பிடு என்பதாம்.

## 10 ஒப்புர வொழுகு

(ப-ரை) ஒப்புர - உலக நடையை அறிந்து, ஒழுகு - நீ அந்த வழியிலே நட.

(க-ரை) எப்போதும் உலக நடவடிக்கையைத் தெரிந்து, அதன்படியே நடத்தல் வேண்டும்.

## 11 ஓதுவ தொழியேல்

(ப-ரை) ஓதுவது-அறிவு நூல்களை வாசிப்பதை, ஒழியேல்-நீ மரணம் வரையில் விடாதே.

(க-ரை) ஞானத்தைக் கொடுக்கும் நூல்களையே நீ சாகும் வரையில் படிக்கவேண்டும்.

## 12 ஔவியம் பேசேல்.

(ப-ரை) ஔவியம் - பொறாமை வார்த்தைகளை, பேசேல் - நீ பேசாதே.

(க-ரை) ஒருவருடைய செல்வத்தைப் பார்த்துப் பொறாமை கொண்டு பேசாதே என்பதாம்.

## 13 அஃகஞ் சுருக்கேல்

(ப-ரை) அஃகம்-தானிய விலையை, சுருக்கேல்-நீ அதிக லாபத்துக்காகக் குறைக்காதே.

(க-ரை) தானியத்தை அளக்கும்போது இலாபத்தை எண்ணி, அளவைக் குறைத்து விடாதே என்பதாம்.

## 14 கண்டொன்று சொல்லேல்

(ப-ரை) கண்டு-ஒன்றைக்கண்டு, ஒன்று-வேறொன்றை, சொல்லேல்-நீ சாட்சியாகும்போது சொல்லாதே.

(க-ரை) எப்போதுங் கண்ணால் கண்டதையே சொல்லுதல் வேண்டும் என்பதாம்.

## 15 ஙப்போல் வளை

(ப-ரை) ஙப்போல்-ஙகரம் தான் பிரயோசனமுள்ளதாயிருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்போல, வளை-நீ பிரயோசன முள்ளவனாய் இருந்து உன் இனத்தைத் தழுவு.

(க-ரை) ங என்னும் எழுத்தானது, தன் வருக்கத்தைத் தழுவுதல்போல, நீ உன் பந்துக்களைத் தழுவு என்பதாம்.

## 16 சனி நீராடு

(ப-ரை) சனி - சனிக்கிழமைதோறும், நீர் ஆடு - எண்ணெய் இட்டுக்கொண்டு நீரிலே தலைமுழுகு.

(க ரை ஒவ்வொரு சனிக்கிழமையும் ஸ்நானஞ்செய்து சுகமாயிரு என்பதாம்.

## 17 ஞயம்பட வுரை

(ப-ரை) ஞயம்பட - பேசுஞ் சொல்லிலே இன்பம் விளையும்படி, உரை-நீ பேசு.

(க-ரை) எப்போதும் இனிய வார்த்தைகளைப் பேசு, கொடுமையாகப் பேசாதே என்பதாம்.

## 18 இடம்பட வீடிடேல்

(ப-ரை) இடம்-இடமானது, பட-அளவுக்கு மேற்பட்டு வீணாய் கிடக்கும்படி, வீடு-வீட்டை, இடேல்-நீ பெரிதாகக் கட்டாதே.

(க-ரை) வீட்டைச் சத்திரம்போல் மிகவும் பெரிதாகக் கட்டாதே, சிறியதாகக்கட்டி வாழ் என்பதாம்.

## 19 இணக்கமறிந் திணங்கு

(ப-ரை) இணக்கம்-சிநேகம் செய்வதற்கு ஏதுவாகிய நற்குண நற்செய்கைகளை, அறிந்து - தெளிந்து, இணங்கு - பின் ஒருவனோடு சிநேகஞ்செய்.

(க-ரை) சிநேகஞ் செய்வதற்கு முன்னமே ஒருவன் குணத்தை ஆராய்ந்து சிநேகித்தல் வேண்டும். அப்படிச் செயயாத சினேகிதம் துன்பந்தரும் என்பதாம்.

## 20 தந்தை தாய்ப்பேண்

(ப-ரை) தந்தை - நீ உன் பிதாவையும், தாய் - மாதாவையும், பேண்-எப்போதும் பூசித்துக் காப்பாற்று.

(க-ரை) தாயையுந் தந்தையையுந் தபிக்க விடுதல் கூடாது என்பதாம்.

## 21 நன்றி மறவேல்

(ப-ரை) நன்றி - ஒருவர் உனக்குச் செய்த உபகாரத்தை, மறவேல்-நீ ஒருபோதும் மறவாதே.

(க-ரை) ஒருவர் உனக்குச் செய்த உபகாரத்தை மறக்காதே; அபகாரத்தை உடனே மறந்துவிடு என்பதாம்.

## 22 பருவத்தே பயிர்செய்

(ப-ரை) பயிர் - பயிர்களை, பருவத்தே-அது விளையும் பக்குவ காலத்திலே, செய்-வேண்டும் முயற்சியிலே வழுவாமல் செய.

(க-ரை) செய்யவேண்டிய வேலைகளைக் காலமறிந்து விடாமல் செய்யவேண்டும் என்பதாம்.

## 23 மண்பறித் துண்ணேல்

(ப-ரை) மண்-நிலம் வழக்குத் தீர்ப்புக்குவரும் குடிகளுடைய பொருளை, பறித்து-அபகரித்து, உண்ணேல்-நீ ஜீவனம் பண்ணாதே.

(க-ரை) நீதிபதியாக இருந்து, இலஞ்சம் வாங்கிச் சீவனம் செய்து பிழைக்காதே என்பதாம்.

## 24 இயல்பலா தனசெயேல்

(ப-ரை) இயல்பு அலாதன-தருமநூலுக்குப் பொருத்த மல்லாதவைகளை, செயேல்-நீ செய்யாதே.

(க-ரை) தருமமில்லாக் காரியங்களைச் செய்யாதே என்பதாம்.

## 25 அரவ மாட்டேல்

(ப-ரை) அரவம் - நஞ்சையுடைய பாம்புகளை, ஆட்டேல் - நீ பிடித்து ஆட்டாதே.

(க-ரை) நீ விஷத்தைக் கொடுக்கும் பாம்புடன் பழகி விளையாடாதே என்பதாம்.

## 26 இலவம் பஞ்சிற் றுயில்

(ப-ரை) இலவம் பஞ்சில்-இலவம் பஞ்சு மெத்தையிலே, துயில்-நீ நித்திரைசெய்.

(க-ரை) பூமியின்மேல் சும்மா படுக்காதே; மெத்தையில் படுத்து உறங்கு என்பதாம்.

## 27 வஞ்சகம் பேசேல்

(ப-ரை) வஞ்சகம்-கபடமான வார்த்தைகளை, பேசேல்-நீபேசாதே.

(க-ரை) மனத்தில் கபடம் இல்லாமல் பேசவேண்டும் என்பதாம்.

## 28 அழகலா தனசெயேல்

(ப-ரை) அழகு அலாதன நீ துன்பப்பட வந்தகாலத்தும் இழிவுள்ள செய்கைகளை, செயேல்-செய்யாதே.

(க-ரை) துன்பம் வந்த காலத்தும் நல்ல வழியிலேயே நடக்க வேண்டும் என்பதாம்.

## 29 இளமையிற் கல்

(ப-ரை) இளமையில்-இளமைப் பிராயத்திலே, கல்-நீ வித்தையைக் கற்றுக்கொள்.

(க-ரை) இளமைப் பருவத்திலேயே படிக்கவேண்டிய நூல்களை நன்றாகக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதாம்.

## 30 அறனை மறவேல்

(ப-ரை) அறனை-தருமத்தை, மறவேல்-நீ ஒருபோதும் மறவாதே.

(க-ரை) நீ எப்போதும் தருமத்தைச் செய்ய மறக்காதே.

## 31 அனந்த லாடேல்

(ப-ரை) அனந்தல் - நித்திரையை, ஆடேல் - நீ அதிகமாகச் செய்யாதே.

(க-ரை) நீ அதிகமாகத் தூங்கக்கூடாது என்பதாம்.

## 32 கடிவது மற

(ப-ரை) கடிவது-ஒருவரைச் சினத்துடன் கடிந்து பேசுவதை, மற-நீ மறந்துவிடு.

(க-ரை) யாவரிடத்திலும் பொறுமையாக இருத்தலே நன்மை.

## 33 காப்பது விரதம்

(ப-ரை) காப்பது - உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவை களைக் காப்பாற்றுவதே, விரதம்-விரதமாம்.

(க-ரை) உனக்கு வியாதி வந்தபோதும் பிறவுயிர்களைக் கொலை செய்யக் கூடாது என்பதாம்.

## 34 கிழமைப்பட வாழ்

(ப-ரை) கிழமைப்பட - உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கும் உரிமைப்படும்படி, வாழ்-நீ வாழு.

(க-ரை) எவருக்கும் பிரயோசனம் உள்ளவனாக இருத்தல் வேண்டும் என்பதாம்.

## 35 கீழ்மை யகற்று

(ப-ரை) கீழ்மை-கீழ்மையான செய்கைகளை, அகற்று-நீ நீக்கு.

(க-ரை) இழிவுதருங் காரியங்களை நீ செய்யாதே என்பதாம்.

## 36 குணமது கைவிடேல்

(ப-ரை) குணமது-மேலாகியகுணத்தை, கைவிடேல்-நீகைவிடாதே.

(க-ரை) நல்ல குணமுள்ளவற்றைக் கைவிடாதே என்பதாம்.

## 37 கூடிப் பிரியேல்

(ப-ரை) கூடி - நல்லவரோடு சிநேகித்து, பிரியேல் - நீ பின் அவரைவிட்டு நீங்காதே.

(க-ரை) நல்ல குணமுள்ளவருடன் ஒற்றுமையாய் இருத்தல் வேண்டும் என்பதாம்.

## 38 கெடுப்ப தொழி

(ப-ரை) கெடுப்பது-பிறருக்குக் கேடு செய்வதை, ஒழி- நீவிட்டுவிடு.

(க-ரை) ஒருவருக்கும் நீ கெடுதி செய்ய நினைக்காதே என்பதாம்.

## 39 கேள்வி முயல்

(ப-ரை) கேள்வி - கற்றவர் சொல்லும் நூற்பொருளைக் கேட்ப தற்கு, முயல்-நீ முயற்சி செய்.

(க-ரை) நூல்களைக் கற்றவர்கள் சொற்களைக் கேட்பது முக்கியம்.

## 40 கைவினை கரவேல்

(ப-ரை) கைவினை-உனக்குத் தெரிந்த கைத்தொழிலை, கரவேல்-நீ சமயத்திலே செய்ய ஒளிக்காதே.

(க-ரை) தேக கஷ்டத்தைக் கவனியாமல் வேலையைச் செய்.

## 41 கொள்ளை விரும்பேல்

(ப-ரை) கொள்ளை - பிறருடைய பொருளைக் கொள்ளையிடுவ தற்கு, விரும்பேல்-நீ ஆசைப்படாதே.

(க-ரை) நீ பிறர் பொருளைக் கொள்ளைகொள்ள விரும்பாதே.

## 42 கோதாட் டொழி

(ப-ரை) கோது - குற்றம்பொருந்திய, ஆட்டு-விளையாட்டுகளை, ஒழி-நீ நீக்கு.

(க-ரை) பிறர்-பழிக்கும் விளையாட்டுகளை எப்போதும் விளை யாடக் கூடாது என்பதாம்.

## 43 கௌவை யகற்று

(ப-ரை) கௌவை - பழிக்குக் காரணமான (வஞ்சகத்தை), அகற்று-நீ போக்குவாயாக.

(க-ரை) மேலானவர் பழிக்கும்படி நீ வைத்துக்கொள்ளாமல் நட.

## 44 சக்கர நெறி நில்

(ப-ரை) சக்கர நெறி-அரசனுடைய ஆஞ்ஞாநுசாரம் செல்லும் வழியிலே, நில்-நீ அடங்கி நில்.

(க-ரை) அரசனது ஆணைக்கு அடங்கி நட என்பதாம்.

## 45 சான்றோ ரினத்திரு

(ப-ரை) சான்றோர் - அறிவினால் நிறைந்தவர்களுடைய, இனத்து-கூட்டத்தில், இரு-நீ எந்நாளும் சேர்ந்திரு.

(க-ரை) பெரியவர்களின்கூட்டத்தை (சகவாசத்தைக்)கைவிடாதே.

## 46 சித்திரம் பேசேல்

(ப-ரை) சித்திரம் - மெய்போலத் தோன்றும் பொய்மொழி களை, பேசேல்-நீ பேசாதே.

(க-ரை) நீ உள்ளதையே பேசு; ஒன்றையும் அலங்கரித்துச் சொல்லாதே என்பதாம்.

## 47 சீர்மை மறவேல்

(ப-ரை) சீர்மை-புகழுக்கு ஏதுவாகிய குணத்தை, மறவேல்-நீ மறந்து விடாதே.

(க-ரை) நீ எப்போதும் கீர்த்தி சம்பாதிப்பதில் இரு என்பதாம்.

## 48 சுளிக்கச் சொல்லேல்

(ப-ரை) சுளிக்க-கேட்பவர் கோபிக்கும்படியாக, சொல்லேல்-நீ ஒன்றையும் பேசாதே.

(க-ரை) நீ எப்போதும் கேட்பவர் விரும்பும் வார்த்தைகளைச்சொல்.

## 49 சூது விரும்பேல்

(ப-ரை) சூது-சூதாடுதலை, விரும்பேல்-நீ ஒருபோதும் விரும்பாதே.

(க-ரை) கஷ்டம் தரும் சூதாட்டம் கூடாது என்பதாம்.

## 50 செய்வன திருந்தச்செய்

(ப-ரை) செய்வன-செய்யுங் காரியங்களை, திருந்த - செவ்வை யாக, செய்-நீ செய்.

(க-ரை) நீ எதையும் செவ்வையாகச் செய்தல் வேண்டும்.

## 51 சேரிடமறிந்துசேர்

(ப-ரை) சேர் இடம்-அடையத்தகும் நன்மையாகிய இடத்தை, அறிந்து-தெரிந்து, சேர்-நீ அடைவாயாக.

(க-ரை) சேரத்தகாத இடத்தில் சேரக்கூடாது என்பதாம்.

## 52 சையெனத் திரியேல்

(ப-ரை) சையென-பெரியோர் உன்னைச் சீ என்று அருவருக் கும்படி, திரியேல்-நீ துஷ்டனாய்த் திரியாதே.

(க-ரை) நீ வீணனாகச் சுற்றித் திரியாதே என்பதாம்.

## 53 சொற்சோர்வு படேல்

(ப-ரை) சொல் - நீ பிறரோடு பேசும் சொற்களிலே, சோர்வு படேல்-மறதிப்பட பேசாதே.

(க-ரை) சொல்லவேண்டுவதை மறந்து போகாமல் சொல்.

## 54 சோம்பித் திரியேல்

(ப-ரை) சோம்பி-நீ செய்யவேண்டும் முயற்சியைச் செய்யாமல் சோம்பல்கொண்டு, திரியேல்-வீணாகத் திரியாதே.

(க-ரை) நீ சோம்பேறியாய் இல்லாமல் வேலை செய் என்பதாம்.

## 55 தக்கோ னெனத்திரி

(ப-ரை) தக்கோன் என-உன்னைப் பெரியோர்கள் யோக்கியன் என்று புகழும்படி, திரி-நீ திரி.

(க-ரை) நீ பெரியோர்கள் யோக்கியனென்று சொல்லும்படி இரு.

## 56 தானமது விரும்பு

(ப-ரை) தானமது-நல்லோருக்குத் தானஞ் செய்தலை, விரும்பு-நீ விரும்பு.

(க-ரை) பாத்திரம் அறிந்து பிச்சை கொடுத்தல் வேண்டும்.

## 57 திருமாலுக் கடிமைசெய்

(ப-ரை) திருமாலுக்கு - விஷ்ணுவுக்கு, அடிமைசெய் - நீ தொண்டு பண்ணு.

(க-ரை) இறைவனுக்கு அடியவனாக இரு என்பதாம்.

## 58 தீவினை யகற்று

(ப-ரை) தீவினை-பாவச்செயல்களை, அகற்று-நீ செய்யாமல் நீக்கு.

(க-ரை) இதாளுக்கு எப்போதும் துன்பத்தை உண்டுபண்ணுதே.

## 59 துன்பத்திற் கிடங்கொடேல்

(ப-ரை) துன்பத்திற்கு - நீ தொழில் செய்யும்போது முயற்சியினாலே வரும் சரீரப்பிரயாசத்தால் ஆகிய துன்பத்துக்கு, இடம் கொடேல்-நீ சிறியதாயினும் இடங்கொடாதே.

(க-ரை) ஒருகாரியம் செய்யும்போது வரும் துன்பத்தை இன்பமென்று கொண்டு முயற்சியை விடாது செய் என்பதாம்.

## 60 தூக்கி வினைசெய்

(ப-ரை) தூக்கி-நீ முடிக்கும் உபாயத்தை ஆராய்ந்து, வினை-ஒரு தொழிலை, செய்-அதன் பின்பு செய்.

(க-ரை) வேலையை இப்படிச் செய்தால் அது சரியாக முடியும் என்று தெரிந்து செய் என்பதாம்.

## 61 தெய்வ மிகழேல்

(ப-ரை) தெய்வம்-கடவுளை, இகழேல்-நீ மறந்தாயினும் இகழாதே

(க-ரை) கஷ்டம் வந்தபோதும் கடவுளைக் கண்டபடி பேசக் கூடாது என்பதாம்.

## 62 தேசத்தோ டொத்துவாழ்

(ப-ரை) தேசத்தோடு-நீ வசிக்கும் தேசத்திலுள்ளவர்களுடனே, ஒத்து-பகையில்லாமல், வாழ்-வாழு.

(க-ரை) ஊராரோடு துவேஷம் இல்லாமல் ஒத்து இரு.

## 63 தையல்சொற் கேளேல்

(ப-ரை) தையல் - வஞ்சக மனத்தினையுடைய மனைவியின், சொல் - சொல்லை, கேளேல்-நீ கேட்டு நடவாதே.

(க-ரை) மனைவியின் சொல்படி எப்போதும் நடக்கக் கூடாது.

## 64 தொன்மை மறவேல்

(ப-ரை) தொன்மை - பழமையாகிய சிநேகத்தை, மறவேல்-நீ மறந்துவிடாதே.

(க-ரை) எப்போதும் பழமையான சிநேகிதமே மேலானது.

## 65 தோற்பன தொடரேல்

(ப-ரை) தோற்பன - தோல்வியடையக்கூடிய வழக்குகளிலே, தொடரேல்-நீ சம்பந்தப்படாதே.

(க-ரை) எப்போதும் பொய்யான வழக்குகளில் தலையிடவேகூடாது.

## 66 நன்மை கடைப்பிடி

(ப-ரை) நன்மை-புண்ணியத்தையே, கடைப்பிடி-நீ விடாமல் உறுதியாகப் பிடி.

(க-ரை) புண்ணிய காரியத்தைச் செய்; பாவகாரியத்தைச் செய்யாதே என்பதாம்.

## 67 நாடொப்பன செய்

(ப-ரை) நாடு - உன் நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன-ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய்-நீ செய்.

(க-ரை) பத்து பேருக்கு ஏற்ற காரியத்தைச் செய் என்பதாம்.

## 68 நிலையிற் பிரியேல்

(ப-ரை) நிலையில் நீ நிற்கின்ற உயர்ந்த நிலையில் நின்று, பிரியேல்-ஒருபொழுதும் நீங்காதே.

(க-ரை) நீ தாழ்ந்த நிலைக்கு வராதே; உயர்ந்த நிலையிலேயே இரு என்பதாம்.

120249

## 69 நீர்விளை யாடேல்

(ப-ரை) நீர் - ஆழம் உள்ள நீரிலே, விளையாடேல் - நீ நீந்தி, விளையாடாதே.

(க-ரை) தண்ணீரில் விளையாடுதல் கஷ்டந்தரும் என்பதாம்.

## 70 நுண்மை நுகரேல்

(ப-ரை) நுண்மை-நோயைத் தருகிற சிற்றுண்டிகளை, நுகரேல்-நீ உண்ணாதே.

(க-ரை) நோயைக் கொடுக்கும் பண்டத்தைத் தின்னாதே.

## 71 நூற்பல கல்

(ப-ரை) நூல் பல-அறிவை வளர்க்கிற நூல்கள் பலவற்றையும் கல்-நீ கற்றுக்கொள்.

(க-ரை) அறிவை வளரச்செய்யும் புத்தகங்களைப் படி என்பதாம்.

## 72 நெற்பயிர் விளை

(ப-ரை) நெற்பயிர் - நெல்லுப்பயிரை, விளை - நீ வேண்டிய முயற்சிசெய்து பயிர்செய்.

(க-ரை) பெருமையாக இருக்க எண்ணம் இருந்தால் பயிர் வேலை செய் என்பதாம்.

## 73 நேர்பட வொழுகு

(ப-ரை) நேர்பட - உன் ஒழுக்கம் கோணாமல் செவ்வைப்பட, ஒழுகு-நீ நட.

(க-ரை) நீ மேன்மையாக இருக்க விரும்பினால், ஒழுங்காக நடக்கவேண்டும் என்பதாம்.

## 74 நைவினை நணுகேல்

(ப-ரை) நை-பிறர் கெடத்தக்க, வினை-தீவினைகளை, நணுகேல்-நீ ஒருபோதும் சாராதே.

(க-ரை) பிறர்க்குக் கேடுண்டாகுங் காரியங்களைச் செய்யாதே.

## 75 நொய்ய வுரையேல்

(ப-ரை) நொய்ய-பலன் இல்லாத அற்ப வார்த்தைகளை, உரையேல்-நீ ஒருபோதும் சொல்லாதே.

(க-ரை) பிரயோசன மில்லாத வார்த்தைகளைப் பேசிக் காலங் கழிக்காதே என்பதாம்.

O-,1AAV,A-9

## 76 நோய்க்கிடங் கொடேல்

(ப-ரை) நோய்க்கு-வியாதிகளுக்கு, இடங்கொடேல்-நீ அவபத்தியம் முதலானவைகளைச் செய்து இடங்கொடாதே.

(க-ரை) நோயை வளரவிடக் கூடாது என்பதாம்.

## 77 பழிப்பன பகரேல்

(ப-ரை) பழிப்பன - அறிவுடையவர்களாலே பழிக்கப்படுவனவாகிய இழிவான சொற்களை, பகரேல்-நீ பேசாதே.

(க-ரை) இழிவான சொற்களைப் பேசலாகாது என்பதாம்.

## 78 பாம்பொடு பழகேல்

(ப-ரை) பாம்பொடு - பால் கொடுத்தவருக்கு விஷத்தைக் கொடுக்கிற பாம்பைப் போன்றவர்களுடனே, பழகேல் - நீ சகவாசஞ் செய்யாதே.

(க-ரை) பாம்புபோன்ற துஷ்டரோடு சிநேகஞ் செய்யாதே.

## 79 பிழைபடச் சொல்லேல்

(ப-ரை) பிழைபட-குற்றங்கள் உண்டாகும்படி, சொல்லேல்-நீ ஒன்றையும் பேசாதே.

(க-ரை) பலர் கூடிய சபையில் குற்றம் இல்லாமல் பேசுதல் வேண்டும் என்பதாம்.

## 80 பீடு பெறநில்

(ப-ரை) பீடு-பெருமையை, பெற-பெறும்படியாக, நில்-நீ நல்ல வழியிலே நில்.

(க-ரை) எப்போதும் நல்லவழியில் நடந்தால் பெருமையுண்டாம்.

## 81 புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

(ப-ரை) புகழ்ந்தாரை - உன்னைத் துதிசெய்து அடுத்தவரை, போற்றி-கைவிடாமல் காப்பாற்றி, வாழ்-நீ வாழு.

(க-ரை) தன்னிடம் வந்து சேர்ந்தவரைக் காத்தல்வேண்டும்.

## 82 பூமி திருத்தியுண்

(ப-ரை) பூமி-உன் விளைநிலத்தை, திருத்தி-சீர்திருத்திப் பயிர் செய்து, உண்-நீ உண்.

(க-ரை) பூமியை நன்றாக உழுது பயிர் செய்தல் வேண்டும் என்பதாம்.

## 83 பெரியாரைத் துணைக்கொள்

(ப-ரை) பெரியாரை-அறிவில் சிறந்த பெரியோரை, துணைக்கொள்-உனக்குத் துணையாகத் தேடிக்கொள்.

(க-ரை) எதையும் பெரியவர்களைக் கேட்டுச் செய்வதே நலம் என்பதாம்.

## 84 பேதமை யகற்று

(ப-ரை) பேதமை-பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தை, அகற்று-(நீ மெய்ஞ்ஞானத்தைக் கடைப்பிடித்து) ஒழி.

(க-ரை) அறியாமையை அறவே ஒழித்துவிடு என்பதாம்.

## 85 பையலோ டிணங்கேல்

(ப-ரை) பையலோடு-சிறுபிள்ளையோடு, இணங்கேல்-நீ கூடாதே.

(க-ரை) நீ உன்னைவிடப் பெரியவரின் சிநேகமே செய்தல் வேண்டும் என்பதாம்.

## 86 பொருடனைப் போற்றிவாழ்

(ப-ரை) பொருள்தனை-திரவியத்தை, போற்றி-மேன்மேலும் உயரும்படி காத்து, வாழ்-நீ வாழு.

(க-ரை) திரவியத்தைக் குறைந்து போகாமல் காத்து வாழ் என்பதாம்.

## 87 போர்த்தொழில் புரியேல்

(ப-ரை) போர்-சண்டையாகிய, தொழில்-தொழிலை, புரியேல்-நீ செய்யாதே.

(க-ரை) எக்காரியத்திலும் சண்டைபோடாதே என்பதாம்.

## 88 மனந்தடு மாறேல்

(ப-ரை) மனம்-மனசு, தடுமாறேல்-யாதொரு விஷயத்திலும் கலங்காதே.

(க-ரை) மேன்மேலும் துன்பம் வந்தாலும் மனம் கலங்குதல் கூடாது என்பதாம்.

## 89 மாற்றானுக் கிடங்கொடேல்

(ப-ரை) மாற்றானுக்கு-பகைவனுக்கு, இடம் கொடேல்-உன்னை நெருங்கிப் பின் வரும்படியாக நீ இடம்கொடாதே.

(க-ரை) எப்போதும் விரோதிக்கு இடம் கொடுத்தல் கூடாது என்பதாம்.

## 90 மிகைபடச் சொல்லேல்

(ப-ரை) மிகைபட - சொற்கள் சுருங்காமல் அதிகப்படும்படி, சொல்லேல்-நீ சொல்லாதே.

(க-ரை) வார்த்தைகளைச் சுருக்கமாகவே பேசுதல் வேண்டும்.

## 91 மீதூண் விரும்பேல்

(ப-ரை) மீது ஊண்-அதிக போசனம் சாப்பிட, விரும்பேல்-நீ ஆசைப்படாதே.

(க-ரை) அதிகமாகச் சாப்பிட்டால் நோய் உண்டாகும்.

## 92 முனைமுகத்து நில்லேல்

(ப-ரை) முனைமுகத்து-சண்டைமுகத்திலே, நில்லேல்-நீ போய் நில்லாதே.

(க-ரை) சண்டை நடக்கும் இடம்போனால் தீமை நேரும்.

## 93 மூர்க்கரோ டிணங்கேல்

(ப-ரை) மூர்க்கரோடு - அறிவில்லாதவர்களோடு, இணங்கேல்-நீ சிநேகம் பண்ணாதே.

(க-ரை) புத்தியில்லாதவர் நட்பு தீமை தரும் என்பதாம்.

## 94 மெல்லியா டோள்சேர்

(ப-ரை) மெல்லியாள் - உன் மனையாட்டியாகிய பெண்ணி னுடைய, தோள்சேர்-தோள்களையே நீ சேர்ந்து வாழு.

(க-ரை) மனைவியுடன் உண்மையாகவும் ஒத்துமையாகவும் இருத்தல் வேண்டும் என்பதாம்.

## 95 மேன்மக்கள் சொற்கேள்

(ப-ரை) மேன்மக்கள்-மேன்மக்களாகிய மனிதருடைய, சொல்-சொல்லை, கேள்-நீ கேட்டு நட.

(க-ரை) மனவாட்டம் வரும்போது, பெரியோரின் துணையைத் தேடல் நலம் என்பதாம்.

## 96 மைவிழியார் மனையகல்

(ப-ரை) மைவிழியார்-மை தீட்டிய கண்களையுடைய தாசிகளது, மனை-வீட்டை, அகல்-நீ ஒருபோதும் கிட்டாமல் அகன்றுபோ.

(க-ரை) தாசிகள் வசிக்கும் தெருவின் வழியாகவும் நடத்தல் கூடாது என்பதாம்.

## 97 மொழிவ தறமொழி

(ப-ரை) மொழிவது-சொல்லப்படும் பொருளை, அற-சந்தேகம் நீங்கும்படி, மொழி-நீ சொல்லு.

(க-ரை) எதையும் நன்றாகத் தெரியும்படிச் சொல்லுதல்வேண்டும்.

## 98 மோகத்தை முனி

(ப-ரை) மோகத்தை - நிலையாத பொருள்களின் மேலதாகிய ஆசையை, முனி-நீ கோபித்து விலக்கு.

(க-ரை) ஆசையை அறவே நீக்கல்வேண்டும் என்பதாம்.

## 99 வல்லமை பேசேல்

(ப-ரை) வல்லமை-உன்னுடைய சாமர்த்தியத்தை, பேசேல்-நீ புகழ்ந்து பேசாதே.

(க-ரை) தன் சாமர்த்தியத்தைத் தானே எடுத்துச் சொல்லிக் கொள்ளக் கூடாது என்பதாம்.

## 100 வாதுமுற் கூறேல்

(ப-ரை) வாது-வாதுகளை, முன்-பெரியோர் முன்னே, கூறேல்-நீ பேசாதே.

(க-ரை) பெரியோர்க்கு முன்னர் தர்க்கம் பேசலாகாது.

## 101 வித்தை விரும்பு

(ப-ரை) வித்தை-கல்விப்பொருளை, விரும்பு-நீ கற்றுக்கொள்ள ஆசைப்படு.

(க-ரை) படிப்பை மேன்மேலும் விரும்பிக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதாம்.

## 102 வீடு பெறநில்.

(ப-ரை) வீடு-மோக்ஷத்தை, பெற-அடையும்படி, நில்-நீ அதற்கு உரிய ஞானவழியிலே நில்.

(க-ரை) மோட்சம் அடையும் வழியைத்தேடி, அதில் பிரயத்தினஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

## 103 உத்தமனா யிரு

(ப-ரை) உத்தமனாய் - நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரிலும் மேலானவனாகி, இரு-நீ இரு.

(க-ரை) மேலான நல்ல குணங்களை உடையவனாக இருத்தல் வேண்டும் என்பதாம்.

## 104 ஊருடன் கூடிவாழ்

(ப-ரை) ஊருடன் - ஊரார்களுடனே, கூடி - சுபாசுப கன்மங்களிலே கலந்து, வாழ்-நீ வாழு.

(க-ரை) ஊரில் உள்ளவர்களுடன் கூடிச் சுபாசுப காரியங்களை செய்து வாழ்தல் வேண்டும் என்பதாம்.

## 105 வெட்டெனப் பேசேல்

(ப-ரை) வெட்டு என - கத்திவெட்டைப்போல், பேசேல் - ஒருவரோடும் கடினமாகப் பேசாதே.

(க-ரை) எல்லாரோடும் இனிமையாகப் பேசுதல் வேண்டும்.

## 106 வேண்டி வினைசெயேல்

(ப-ரை) வேண்டி - யாதொரு பிரயோசனத்தை விரும்பி, வினை-தீவினையை, செயேல்-நீ ஒருவருக்கும் செய்யாதே

(க-ரை) ஒரு பலனை எதிர்கண்டு காரியத்தைச் செய்தல்கூடாது.

## 107 வைகறைத் துயிலெழு

(ப-ரை) வைகறை - நீ தினந்தோறும் விடியற் காலத்திலே, துயில்-நித்திரையைவிட்டு, எழு-எழுந்திரு.

(க-ரை) சூரியன் உதயமாகும் முன்னமே படுக்கையைவிட்டு எழுந்திருக்க வேண்டும் என்பதாம்.

## 108 ஒன்னாரைச் சேரேல்

(ப-ரை) ஒன்னாரை - பகைவருடனே, சேரேல்-நீ எக்காலத்திலும் சேராதே.

(க-ரை) நீ ஒருபோதும் பகைவரோடு சேர்ந்து மோசம் போகாதே என்பதாம்

## 109 ஓரஞ் சொல்லேல்

(ப-ரை) ஓரம்-பக்ஷபாதம், சொல்லேல்-நீ யாதொரு வழக்கிலும் சாட்சியாகும்போது சொல்லாதே.

(க-ரை) நடுநிலைமையுடன் எந்த வழக்கிலும் பேசுதல் நன்மை தரும் என்பதாம்.

ஆத்திசூடி மூலமும் உரையும் முற்றிற்று.

---

அ. இராஜரத்தின முதலியார், மலர்மகள் விலாசம் பிரஸ்
நெ-23, தாண்டவராயபிள்ளை வீதி, சென்னை-1. (1955)

120279

மலர்மகள் பதிப்பின்

## பாடசாலைக்குரிய புத்தகங்கள்

| | அ. | பை. |
|---|---|---|
| மலர்மகள் பாலபாடம் | 4 | 0 |
| ,, பெரிய அரிச்சுவடி | 4 | 0 |
| ,, பெரிய கெட்டி எண்சுவடி | 6 | [illegible] |
| ,, எண்சுவடி வாய்பாடு | 4 | [illegible] |
| ,, இங்கிலீஷ் வாய்பாடு | 1 | 0 |
| அரிச்சுவடி (அட்டை) | 2 | 0 |
| விவேக சிந்தாமணி உரை | 8 | 0 |
| அருணகிரியந்தாதி | 8 | 0 |
| அறப்பளீசுரசதகம் | 6 | 0 |
| குமரேசசதகம் | 6 | 0 |
| தண்டலையார்சதகம் | 4 | 0 |
| நாராயணசதகம் | 6 | 0 |
| திருவேங்கடசதகம் | 6 | 0 |
| பார்த்தசாரதிமாலை | 4 | 0 |
| ஆத்திசூடி உரை | 2 | 0 |
| கொன்றைவேந்தன் உரை | 2 | 0 |
| வெற்றிவேற்கை உரை | 2 | 0 |
| உலகநீதி உரை | 2 | 0 |
| வாக்குண்டாம் உரை | 2 | 0 |
| [illegible]வழி உரை | 2 | 0 |
| [illegible]ர்னெறி உரை | 2 | 0 |

(மலர்மகள் பதிப்பை கவனித்து வாங்கவும்)

அ. இராஜரத்தின முதலியார்,
மலர்மகள் விலாசம் பிரஸ்,
23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

208
14-59